93

**சுருக்கம்**

பொதுப்பணிகள் - தமிழ்நாடு அமைச்சுப்பணி - கருணை அடிப்படையில் பணிநியமனம் - ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை - திண்டுக்கல் மாவட்டம் - பணியில் இருக்கும் போது காலமான திரு.கே.சேகர், அலுவலக உதவியாளர் என்பவரின் மகன் திரு.சே.ராம்பிரசாத், இளநிலை உதவியாளர் நிலையில் காசாளர் பதவியில் பணிநியமனம் - பணிவரன்முறை செய்தல் - ஆணை வெளியிடப்படுகிறது.

---

**ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் (பஅ-5) துறை**

அரசாணை (4ப) எண்.04

நாள் 06.02.2023.
சுபகிருது, தை 23.
திருவள்ளுவர் ஆண்டு 2054.

**படிக்கப்பட்டவை:**

1. அரசாணை (நிலை) எண்.18, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் (க்யூ.1) துறை, நாள்: 23.01.2020.
2. திண்டுக்கல் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் செயல்முறை ஆணை ந.க.எண்.4350/2020/ஊ.வ.1, நாள்: 07.08.2020.
3. ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநரின் கடித ந.க.எண்.51549/2020/டி3, நாள்: 08.12.2020 மற்றும் 26.03.2021.

*****

**ஆணை:**

மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையின் அடிப்படையில், திண்டுக்கல் மாவட்ட ஊரக வளர்ச்சி அலகு, நிலக்கோட்டை ஊராட்சி ஒன்றியத்தில் அலுவலக உதவியாளராகப் பணிபுரிந்து 26.01.2020 அன்று பணியிடைக்காலமான திரு.கே.சேகர் என்பவரின் வாரிசுதாரரும் மகனுமான திரு.சே.ராம்பிரசாத் என்பவருக்கு மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட செயல்முறையின்படி கருணை அடிப்படையில், திண்டுக்கல் மாவட்ட ஊரக வளர்ச்சி அலகில் இளநிலை உதவியாளர் நிலையில் காசாளராக தற்காலிகமாகப் பணிநியமனம் வழங்கப்பட்டு, தனியர் 10.08.2020 முற்பகல் முதல் பணியேற்று பணிபுரிந்து வருவதால், அன்னாரின் பணியை வரன்முறை செய்து ஆணையிடும்படி ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர் மேலே மூன்றாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில் அரசுக்கு கருத்துரு அனுப்பியுள்ளார்.

2. மேலும், மறைந்த அரசு ஊழியர் தகுதிகாண் பருவம் நிறைவு செய்த பணியாளர் என்றும், அவரது குடும்பம் வறிய நிலையில் உள்ளது என்றும், அவரது மகன் திரு.சே.ராம்பிரசாத் கருணை அடிப்படையில் பணிநியமனம் கோரி 26.02.2020 அன்று விண்ணப்பித்தார் என்றும், அவரது பிறந்த தேதி 04.07.1998 என்றும், பணிநியமனம் கோரி விண்ணப்பித்த நாளில் தனியரின் வயது 21 என்றும், அவர்

இடைநிலைக் கல்வி பள்ளியிறுதி வகுப்புப் பொதுத் தேர்வில் தேர்ச்சி பெற்றுள்ளார் என்றும், அவருக்குப் பணி நியமனம் வழங்குவதற்கு இதர வாரிசுதாரர்கள் ஆட்சேபணை ஏதும் தெரிவிக்கவில்லை எனவும் தெரிவித்துள்ளார்.

3. ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநரின் கருத்துரு உரிய அசல் ஆவணங்களுடன் மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையின் அடிப்படையில் அரசால் கூர்ந்தாய்வு செய்யப்பட்டது. ஆய்வுக்குப்பின்னர், கருணை அடிப்படையில் பணிநியமனம் வழங்கும் திட்டத்தின்கீழ், திண்டுக்கல் மாவட்ட ஊரக வளர்ச்சி அலகில், ரெட்டியார்சத்திரம் ஊராட்சி ஒன்றியத்தில் இளநிலை உதவியாளர் !நிலையில் காசாளராகப் பணிநியமனம் செய்யப்பட்டுள்ள திரு.சே.ராம்பிரசாத் என்பவர் பணிநியமனத்திற்கான அனைத்துத் தகுதிகளையும் பெற்றுள்ளதால், தனியரின் பணியினை இளநிலை உதவியாளர் நிலையில் காசாளராக பணியில் சேர்ந்த நாளான 10.08.2020 முற்பகல் முதல் அப்பணியிடத்திற்குரிய உடற்தகுதி பெற்றிருக்க வேண்டும் என்ற நிபந்தனையுடன் வரன்முறை செய்து அரசு ஆணையிடுகிறது. அவ்வாறு முன்தேதியிட்டு பணிவரன்முறை செய்யப்படுவதால், தனியர் ஆண்டு ஊதிய உயர்வுகள் மற்றும் ஊதிய நிலுவைத் தொகைப் பெற உரிய விதிகளின்படி தகுதியுடையவராகிறார்.

4. இவ்வாணை தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறையின் 19.01.2023-ஆம் நாளிட்ட அலுவல் சாரா எண்.272/ட்டி1/2023-1, மற்றும் மனித வள மேலாண்மை துறையின் அலுவல் சாரா எண்.3955245/ஜி1/2023, நாள் 20.01.2023 -ல் பெற்ற இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

பெ.அமுதா,
அரசு முதன்மைச் செயலாளர்.

பெறுநர்
ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையர், சென்னை-15.
மாவட்ட ஆட்சித் தலைவர், திண்டுக்கல் மாவட்டம்.
திரு.சே.ராம்பிரசாத், காசாளர்,
ஊரக வளர்ச்சிப் பிரிவு, திண்டுக்கல் மாவட்டம்.
(வழி: மாவட்ட ஆட்சித் தலைவர், திண்டுக்கல் மாவட்டம்)
மாநிலக் கணக்காயர், சென்னை –18/35.
கருவூல மற்றும் கணக்குத் துறை ஆணையர், சென்னை-15
மாவட்ட கருவூல கணக்கு அலுவலர், திண்டுக்கல் மாவட்டம்.

**நகல்:**
தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை, சென்னை-9.
மனித வள மேலாண்மைத் துறை, சென்னை-9.
இருப்புக் கோப்பு / உதிரி.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்.